ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

குறள் முழக்கம்



திருவள்ளுவர் ஆண்டு-2057 தை-25 பொ.ஆ.2026-பெப்பிரவரி 8

உலகத் திருக்குறள் இணையக் கல்விக் கழக வெளியீடு

இளையநாவலர் குமணராசனார் எழுபதாம் அகவைச் சிறப்பிதழ்

நூறாண்டு வாழ்க!

முற்றிய அன்புடை மூக்கம்மாளும்
சுற்றம் பேணிடும் சுந்தர ராசனும்
பெற்ற புதல்வர் குமணராசனை
வற்றா அன்புடன் வளர்த்த வேளை
பற்றிய பணியால் வாழ்விடம் மாறி
மராத்தி மண்ணுக்கே வந்து சேர்ந்தனர்;
நெல்லைத் தமிழ்ப்பயிர் எல்லை மாறி
மும்பைப் புலத்தில் செழித்து வளர்ந்தே
மராத்திய மாநிலம் பயனுறச் செய்ததே!
இளைய நாவலர் என்றே போற்றிடப்
பொழிவால் புலமை ஒளிபாய்ச்சுவதும்
மன்பதை பயனுறத் தொண்டு புரிந்து
மும்பை நகர்க்கே அணியாய்த் திகழ்வதும்
உவகை பொங்கவே உலகம் போற்றுதே!
நற்றுணை புரிந்திடும் நங்கை அவர்களும்
குன்றாக் கொள்கைக் குமண ராசனும்
இன்னும் நூறாண்டு இனிதே வாழ்க!

--குறள்நெறி இணைய இதழ்க்குழுவினர்

அரிய கருவூலமாய்

ஆவணப் பதிவுகள்

மூலைக்கரைப்பட்டி மண்ணில்
முளைத்த தமிழ்ச் செடியாக,
மும்பை மண்ணில்
நிழல் தரும் ஆலமரமாய்
வளர்ந்த பயணம் உங்கள் வாழ்க்கை.

கடல்சார் பொறியியல் கையில்,
தமிழ்சார் பண்பாடு நெஞ்சில்,
எண்ணெய்க் கப்பல்களுடன்
உலகம் சுற்றியபோதும்
எண்ணங்களில்
தமிழையே ஏற்றி வந்தீர்.

தொல்காப்பியம் தோழனாய்,
திருக்குறள் தாய்மொழியாய்,
செவ்வியல் சொற்களின்
சிற்பியாகி,
*தமிழ் இலெமுரியா*வில்
தமிழுக்கொரு கரையமைத்தீர்.

புத்தகங்களால்
சிந்தனை விதைத்தீர்,
இதழ்களால்
விழிப்புணர்வு விளைத்தீர்,
அறக்கட்டளையாய்
அருள் பொழிந்து,
ஒடுக்கப்பட்டவர்களின்
எதிர்காலத்தில்
ஒளி ஏற்றினீர்.

பேரிடர் காலம் வந்தபோது,
பதவிகள் பேசவில்லை;
பசித்த வயிறுகள் பேசின.
உதவிக் கைகளாய் நீங்களே
மனிதநேயத்தின்
நேரடி மொழிபெயர்ப்பானீர்.

உலகம் சுற்றித்
தமிழ்சொல் விதைக்கிறீர்;
மொழி கற்ற மாணவர்களின்
கண்களில்
எதிர்காலத் தமிழைக் காண்கிறீர்.

எழுபது ஆண்டுகள் –
ஒரு மனிதரின் வயதல்ல;
ஒரு இயக்கத்தின் வரலாறு,
ஒரு தலைமுறையின் வழிகாட்டி,
ஒரு மொழியின்
அமைதிக் காவல்.

அய்யா,
புகழ் உங்களைத் தேடி வரட்டும்,
பண்பு உங்களைச் சூழ்ந்து நிற்கட்டும்,
தமிழ் உங்கள் நிழலாய்
என்றும் தொடரட்டும்.

உற்ற துணைவியின்
தக்க துணையும்
பெற்ற பிள்ளைகளின்
பேணுகையும்
உங்கள்
பொதுப்பணிக்கு
மேலும் வலிமை
தமிழ்த்தொண்டுக்கு
நாளும் நற்றுணை!
மக்கள் மனைவி
சுற்றம்சூழ
இனிய சூழலில்
நலம் பல வாய்ந்து
வாழிய வாழிய!
நீடூழி வாழ்க,
தேன்தமிழ்ச் சிரிப்புடன்,
மனிதநேய ஒளியுடன்,
தமிழ்த் தொண்டின்
தீராப் பயணத்துடன்.

— எழுபதாம் பிறந்தநாள்
இனிய நல் வாழ்த்துக்கள்

----*மறைமலை இலக்குவனார்*

எமது ஜெரிமெரி தமிழ்ச் சங்கத்தின்
நலம் விரும்பியும்,
ஆரம்பகால நட்புறவின் அரிய அடையாளமாகவும்
விளங்கும்
உலகம் சுற்றி தமிழின் மணம் பரப்பும்,
"ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்"
என்ற உயரிய மனிதநேயத்தை வாழ்க்கை
நெறியாகக் கொண்டு வாழும்
கொரோனா நோய்த்தொற்று பேரிடர் காலத்தில்
மக்கள் நலப்பணிகளில் முன்நின்று சேவை
செய்த
தமிழ் அறிஞர்,
இலெமுரியா அறக்கட்டளை நிறுவனத் தலைவர்,
மும்பை தமிழர்களின் இதயங்களில் நிலைத்து
வாழும் தமிழ் நாயகன்,
அகிலமெங்கும் மும்பை தமிழர்களின்
முகவரியாக விளங்கும்
அய்யா சு. குமணராசன் அவர்கள்,
எல்லா நலமும் வளமும் பெற்று,
தேன்தமிழ் போல் இனிமையுடன்,
புகழும் பண்பும் பொலிந்து,
நீடூழி சிறந்து வாழ,
மனமார்ந்த இனிய பிறந்தநாள் நல்
வாழ்த்துக்கள்.

இல. முருகன்
தலைவர்
ஜெரிமெரி தமிழ்ச் சங்கம்
மும்பை - 400072
9867888500

பல்துறை வித்தகர் குமணராசனார்

இயற்றிய நூல்கள்

பார்வையின் நிழல்கள், உலகை அறிவோம்,

மனக்குரல், துணை எழுத்து,

உலகை மாற்றிய சொல்வெட்டுகள்,

பனித்துளியின் நுனித்துளிகள்,

மறந்து போன நினைவுகள்,

தமிழ் அறிவோம்,

செய்நன் விதைகள்,

செவ்வியல் இலக்கியங்கள் ஓர் அறிமுகம்,

THE FIFTH PILLAR (ENGLISH)

இவருடைய தமிழ் ஆர்வத்தின் கரணியமாகத் தன் சொந்தப் பொறுப்பில் “தமிழ் இலெமுரியா” என்ற பருவ இதழைத்தொடங்கி, தொடர்ந்து 13 ஆண்டுகள் வெளியிட்டுள்ளார். இந்த இதழ் தமிழ் நாட்டின் சிசிறந்த இதழ் என்ற தகுதியைப் பெற்று 2018 ஆம் ஆண்டு எஸ்.ஆர்.எம் கல்விக் குழுமத்தின் தமிழ்ப் பேராயம் “சுதேசமித்திரன் தமிழ் இதழ் விருது” பெற்றது. தன் வாழ்நாள் சேமிப்பு முழுவதையும் தமிழ்த் தொண்டுக்காகவே செலவிட்டவராவார்.
“இலெமுரியா அறக்கட்டளை” என்ற தொண்டு நிறுவனத்தை நிறுவிக் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் மாணவர்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி உதவி அளித்து, ஊக்கம் தருபவர்.
கோவித்19 தீநுண்மியின் காரணமாக வாழ்வாதாரம் இழந்த மும்பை மக்களுக்கு உணவுத் தொகுப்புகள், மருந்துகள், மருத்துவ உதவிகள் வழங்கி, உலக அளவில் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த்தவர். சற்றொப்ப ஒன்றேகால் கோடி உருபாய்க்கும் அதிகமான அளவு மக்களுக்குப் பேரிடர்காலத்து உதவிகளைக் கொண்டு சேர்த்தவர். இவருடைய அறக்கட்டளைப் பணிகளைப் பாராட்டி மகராட்டிரா மாநில ஆளுநர், முதலமைச்சர் மற்றும் பிற அமைச்சர் பெருமக்கள் வாழ்த்தியுள்ளனர்.

[படம்;நன்றி-புதுவை மு.இளங்கோவன்

சு. குமணராசன் பணிபுரிந்த, உருவாக்கிய தமிழமைப்புகள்: பம்பாய் பகுத்தறிவாளர் கழகம், பம்பாய் திருக்குறள் பேரவை, மும்பைத் தமிழர் பேரவை, திராவிட முன்னேற்றக் கழகம், பம்பாய்த் திருவள்ளுவர் மன்றம், ஈழ நட்புறவுக் கழகம், மும்பை தமிழ் இலக்கிய வளர்ச்சிக் கழகம், மராத்திய மாநில எழுத்தாளர் மன்றம். ஆகிய அமைப்புகளின் நிறுவன அமைப்பாளராகவும், செயலாளராகவும், ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு, தமிழ்த் தொண்டாற்றியவர்.
தமிழ் மொழியைக் கற்க வாய்ப்பின்றி உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்குடன் பெங்களூருவில் தொடங்கப் பெற்ற “ தமிழ் அறக்கட்டளை” என்ற அமைப்பின் தலைவராகவும் பணியாற்றி வருபவர். இதுகாறும் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் வாழும் ஐந்தாயிரத்துக்கும்அதிகமான மாணவர்களுக்குத் தமிழ் மொழியை எழுதவும் படிக்கவும் இவ்வறக்கட்டளை உதவியுள்ளது.
பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் நிறைந்த இவர் தமிழ் மொழி, தமிழர் உரிமை, இனநலம், சமூகவியல் சார்ந்து இன்றளவும் மகராட்டிரா மாநிலத்தில் தொடர்ந்து இயங்கி வருபவர். சிலவாண்டுகளுக்கு முன்னர்த் தொடங்கப்பட்டுள்ள அனைத்திந்தியத் தமிழ்ச் சங்கப் பேரவையின் அறிவுரைஞராகவும் செயல்பட்டுவருகின்றார். அயலகத் தமிழர் வரலாற்றில் சு.குமணராசனின் பணி என்றும் நினைவுகூரப்படும்.

மொழித்தூய்மையில் நாம் வெற்றி பெறவில்லையே!

தமிழ் லெமூரியா குமணராசன்

உலகின் மிகப் பழமையான மொழிகள் என வரலாற்றாய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ள தமிழ், கிரேக்கம், இலத்தீன், சீனம், சமசுகிருதம், ஈபுரு ஆகிய மொழிகளில் கிரேக்கம், இலத்தீன், ஈபுரு, சமசுகிருதம் போன்றவை குறுகியும் அழிவு நிலையிலும் இருப்பதைக் காணமுடிகிறது. எஞ்சியிருக்கின்ற சீனம், தமிழ் ஆகிய இரு மொழிகளின் வரலாற்றையும் இலக்கியங்களையும் ஒப்பாய்வு செய்யும் போது செவ்வியல் தன்மையும் சீர்மையும் தனித்தியங்கும் தன்மையும் வரலாற்றுத் தொன்மையும் அறநெறிக் கொள்கைகளின் கருவூலமாகவும் விளங்குவது **தமிழ் மொழி** ஒன்றே ஆகும். சற்றொப்ப முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகில் பேசும் மொழியாகவும் இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாட்டுப்புற இலக்கிய வடிவங்களையும் கொண்டு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுத்து வடிவங்கள் அமையப் பெற்று தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இலக்கண வடிவம் பெற்று எண்ணற்ற இலக்கியங்களைக் கொண்ட மொழி தமிழ் மொழியாகும்.

தமிழ் நாடு என்பது இன்று நாம் காண்பது போல் இல்லாது தெற்கே பல்லாயிரம் கற்கள் (மைல்) தூரம் பரவியிருந்ததும் அந்நிலப்பகுதியில் பஃறுளி ஆறும் பன்மலை அடுக்கமும் இருந்தன என்பதும் வரலாற்று உண்மையாகும். அப்பகுதி உலகின் மாந்த இனம் தோன்றிய **இலெமுரியாக் கண்டமாகும்**. அந்த நிலத்தில் வழக்கில் கொள்ளப்பட்ட மொழி தமிழ் என்பதும் அங்கு தமிழ்ப் புலவர்கள் பலர் சங்கம் வைத்து மொழி வளர்த்தனர் என்பதும் நமக்குக் கிடைக்கின்ற ஆய்வுச் சான்றுகளாகும். எனினும் தமிழ் மொழியும் கால ஓட்டத்தில் உலகின் பிற மொழிகளுக்கு ஏற்பட்ட தாக்கங்களுக்கும் புணர்ச்சிகளுக்கும் உள்ளாகியிருக்கிறது. ஆனால் பிற மொழிகளைப் போல குறுகியோ அழிவு நிலையையோ எட்டவில்லை. அதன் கரணியம் அம்மொழியின் இயற்கைக் கூறுகளேயாகும். **அறநெறிக் கொள்கைகளையும் அறிவியல் சிந்தனைகளையும் மருத்துவம் வானவியல் அறிவையும் கொண்ட ஒரு மொழி** இந்தியத் துணைக்கண்டத்தில்மறையாது மங்காது வாழ்ந்து வழங்கி வருவது எண்ணி இந்தியக் குடிமக்கள் எந்த மாநிலத்தவராயினும் பெருமை கொள்ளவேண்டும். ஆனால் தமிழ் மொழியின் இந்த மேன்மையும் தமிழ் மக்களின் அறிவுக் கூர்மையும் பிற மாநில (குறிப்பாக வட இந்திய மாநில) மக்களிடையே வெறுப்புணர்வையும் பொறாமை உணர்வையும் தூண்டியிருக்கின்றன. அதற்குக் காரணம் இந்திய வரலாறு என்பது வடக்கிருந்து தொடங்குவதாகவும் இந்தியப் பண்பாடு என்பது வேதகால ஆரியப் பண்பாடு எனவும் சமசுகிருதம் தான் முதன்மொழி எனவும் பல வரலாற்றுத் திரிபுகள் தொடர்ந்து நிலைப்படுத்தப் பட்டுள்ளமையே ஆகும். இந்த வரலாற்றுச் சிதைவு தொல்காப்பியர் காலம் முதலே தொடங்கப் பெற்றதாகும். ஒரு மொழியைச் சிறுகச்சிறுக சிதைப்பதின் மூலம் அம் மொழிப் பேசும் மக்களிடையே பண்பாட்டு ஊடுருவலையும்

எளிதாகச் செய்து விட முடியும் என்ற உள்நோக்கமும் ஆகும். அன்றுமுதல் இன்று வரை ஒரு கலப்பு மொழியை உருவாக்குவதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதன் விளைவாகவே இன்று தமிழ் நாட்டில் எண்ணற்ற வடமொழிச் சொற்கள் கலக்கப் பட்டு, **தாம் பேசுவது தமிழ் மொழி அல்ல என்று அறியாத வண்ணம் தமிழ் மக்கள் பலர் வடமொழிக் கலந்த சொற்களை அன்றாட வாழ்க்கையில் பயன் படுத்தி வருகின்றனர்**. அன்புக்குப் பதில் பிரியம், அமைதிக்குப் பதில் சாந்தம், நட்புக்குப் பதில் சிநேகம், பகைக்குப் பதில் விரோதம், அறிவுக்குப் பதில் புத்தி, நாணத்திற்குப் பதில் சங்கோசம், நல்வாய்ப்புக்குப் பதில் அதிர்ட்டம், இழப்புக்குப் பதில் நட்டம், விருப்பத்திற்குப் பதில் இட்டம், முழக்கத்திற்குப் பதில் கோசம், நினைவுக்குப் பதில் ஞாபகம், கனவுக்குப் பதில் சொப்பனம், மகிழ்ச்சிக்குப் பதில் சந்தோசம், வணக்கத்திற்குப் பதில் நமசுகாரம் என்பவை சில சான்றுகளாகும்.

பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பின் தமிழில் **மணிப்பிரவாள நடை** என ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு தமிழையும் சமசுகிருதத்தையும் சேர்த்து எழுதுவது என ஒரு புதிய உத்தியும் கையாளப் பட்டது. இதன் மூலம் தமிழ் தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி அல்ல என்று மறைவாக ஓதப்பெற்றது. தொடர்ந்து வந்த மொகாலாய அரசுகள், விசய நகரப் பேரரசு, ஆங்கிலேயர்கள் எனப் பல நூற்றாண்டுகளாகப் பிற மொழிகள் தமிழில் ஊடுருவின. இதன் விளைவாகத் **தமிழ் மண்ணில் ஒற்றுமைக் கேடு, பண்பாட்டுப் படையெடுப்புகள், மொழி இழிபு, ஊர்ப்பெயர்கள் மாற்றம், வருணசாதி உருவாக்கம், பல கடவுளர்கள், மதப்பூசல்கள் எனப் பல மாற்றங்கள் நிகழ்ந்தன**. குடமூக்கு கும்பகோணமாகவும், சிற்றம்பலம் சிதம்பரமாகவும், முதுகுன்றம் விருதாச்சலமாகவும், மறைக்காடு வேதாரண்யமாகவும், மயிலாடுதுறை மாயூரமாகவும், வினைதீர்த்தான் கோயில் வைத்தீசுவரன் கோயிலாகவும் மாற்றம் பெற்றன. தமிழ்ப் புலவன் பாரதி கூட வேற்றுமொழிச் சொற்களை வெகுவாகக் கையாண்டார். அந்த அளவுக்கு மொழி இன பண்பாட்டுக் கலப்பு தமிழ் மண்ணில் ஆழ வேரூன்றியது.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா வந்த கிறித்துவப் பேராயர்களில் ஒருவரான **கால்டுவெல்** திராவிட மொழிகளை ஆய்ந்து தமிழ் மொழியின் தனித்தியங்கும் தன்மையையும் அதற்கும் வட இந்திய மொழிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை எனவும் தன் ஆய்வுகளின் மூலம் வெளிப்படுத்தினார். பின்னர் மொழிச் சிதைவிலிருந்து மொழியைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் தமிழறிஞர்களிடையே தோன்றியது. 1916 ஆம் ஆண்டு **தனித் தமிழ் இயக்கம்** தோற்றுவிக்கப் பெற்றது. அதை முன்னெடுத்துச் சென்றவர் **மறைமலை அடிகள்** ஆவார். அவரைத் தொடர்ந்து **தேவநேயப் பாவாணர், இலக்குவனார், பெருஞ்சித்திரனார், கி.ஆ.பெ.விசுவநாதம், குன்றக்குடி அடிகளார், இராச மாணிக்கனார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** எனப் பலரும் தனித்தமிழ் இயக்கம் வெற்றி பெற உழைத்தனர்.

மொழித்தூய்மை என்பது மொழிச் சிதைவிலிருந்து மொழியைக் காத்தல் என்னும் தலையாய நோக்கம் கொண்டது. ஆனால் அது இன்று ஏதோ தமிழன் என்றால் மொழி வெறியன் என்று பார்க்கப்படுகிறது. எந்த ஒரு மொழியும் பிற மொழிகளின் மேலாண்மைக்கும் வன்புணர்ச்சிக்கும் உள்ளாகாதவாறு இருக்கும் வரையில் தான் அம் மொழியின் தூய்மையும் கருப்பொருளும் காப்பாற்றப்படும்; நெறிகள் போற்றப்படும். ஆனால் இன்று **அரசியல் காரணங்களுக்காகவும் தமிழின் மேன்மையை ஏற்றுக் கொள்ள மறுப்பதாலும் பல முனைகளிலிருந்து வட மொழிகள் குறிப்பாக சமசுகிருதம், இந்தி, ஆங்கிலம் போன்றவை தமிழ் மக்கள் மத்தியில் வலிந்து புகுத்தப் படுகின்றன.** தமிழ் தொடர்ந்து வளர்ச்சிப் பெற்று சொற்பெருக்கத்தைக் காலத்திற்குத் தகுந்தவாறு ஏற்படுத்திக் கொண்டாலும் **சொந்த**

மொழியில் பேசுவதற்குத் தயக்கம் காட்டும் தமிழர்கள் பெருமளவில் வளர்ந்து வருகின்றனர். தமிழர்களிடம் சோற்றுக்குப் பஞ்சம் வரலாம் ஆனால் சொற்களுக்குப் பஞ்சம் இல்லை என்பதை உணராது மொழியின் ஊடே பண்பாட்டுக் கலப்புக்குப் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். சொந்த மொழியில் சொல்லிருந்தும் சோம்பேறித்தனத்தினால் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குகிறார்கள். இது **தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் கேடு விளைவிப்பதாகும் என்பதை உணர வேண்டும்**.

தனித் தமிழ் இயக்கம் கண்டு நூறாண்டுகள் கடந்த நிலையிலும் **மொழித்தூய்மையில் நாம் வெற்றி பெறவில்லை** என்ற ஏக்கத்துடனும் தமிழினம் தன் மொழி நெறிக் கொள்கையில் வளர வேண்டும் என்ற நோக்கத்துடனும் சில செய்திகளைத் தமிழ் கூறும் நல்லுலகுடன் பகிர்ந்து கொண்டோம். அறநெறி நூற்கள் அமைவுறப்பெற்ற அருந்தமிழ் மக்கள் வாழ்வு செறிவுற செழிப்புற வேண்டும் என்பதே எம் அவா.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (*திருவள்ளுவர், திருக்குறள் .10*

[நன்றி: இலக்குவனார் திருவள்ளுவன்_-அகரமுதல இணைய இதழ்





மூலைக்கரைப்பட்டி, என்னும் சிற்றூரில் பிறந்து 1973ஆம் ஆண்டு முதல் மும்பையில் வசித்து வருபவர்.தந்தை பெரியாரின் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டு வாழ்க்கையை அவற்றின் வடிவமாகவே அமைத்துக் கொண்டவர், கடற்பொறியியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் ,பாதுகாப்பு என பல துறைகளில் கல்வி கற்று இந்தியப் பாதுகாப்புத்துறை கப்பல் தளம், கடலோரப் பாதுகாப்புப் படையின் பொறியியல் பிரிவு மற்றும் தனியார் கப்பல் நிறுவனங்கள் எனப் , பல நிறுவனங்களில் பணியாற்றிய பழுத்த அனுபவம் பெற்றவர். இவரது தகுதி மற்றும் திறமையினைக் கருத்தில் கொண்டுஇந்திய அரசு, 2004ஆம் ஆண்டு மும்பை துறைமுகப் பொறுப்புக்கழக உறுப்பினராக நியமனம் செய்தது. எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையில் தென் மத்திய ஆசிய நாடுகள், - குழுமத்தின் பாதுகாப்புத் துறையில் உறுப்பினராகவும்பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். உலகின் முப்பதுக்கும் அதிகமான நாடுகளில் பயணம் செய்துள்ளார்,மும்பையின் இலக்கியம், சமூகம் மற்றும் அரசியல் சார்ந்த மேடைகளில் காணப்படும் சிறந்த சொற்பொழிவாளர்.மும்பையிலிருந்து வெளிவரும் தமிழ் ஏடுகளில் தமிழ், தமிழர் இன உணர்வைப் போற்றும் வகையில் கட்டுரைகளும் எழுதி வருபவர். இவரது சொல்லும், செயலும் தமிழர் சோர்வைப் போக்குபவை.